HUMAN RIGHTS WATCH

# “ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவையாக இருப்பதில்லை”

## இலங்கையில் பாலின அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையிலான பாரபட்சம்

பதிப்புரிமைதீ 2016 மனித உரிமைகள் கண்காணிப்பகம்
பதிப்புரிமையுடையது
ஐக்கிய அமெரிக்காவில் அச்சிடப்பட்டது
ஐளுடீே: 978-1-6231-33931
அட்டைப்பட வடிவமைப்பு: ரபியேல் ஜிமனேஸ்

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) உலகெங்கிலும் வாழ்ந்து வரும் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்து வருகின்றது. நாங்கள் துஷ்பிரயோகங்களை மிகவும் நுட்பமான விதத்தில் புலன்விசாரணை செய்து, விடயங்களைப் பரவலான விதத்தில் அம்பலப்படுத்தி வருவதுடன், அதிகாரத்தில் இருப்பவா்கள் உரிமைகளை மதித்து, நீதியை நிலை நிறுத்த வேண்டுமென அவா்கள் மீது அழுத்தம் பிரயோகித்து வருகின்றோம். மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுயாதீனமான ஒரு சா்வதேச நிறுவனமாக இருந்து வருவதுடன், அது மனித கண்ணியத்தை மேம்படுத்துவதற்கும், அனைவருக்குமான மனித உரிமைகளை முன்னெடுப்பதற்குமான முனைப்பு மிகுந்த ஒரு இயக்கத்தின் பகுதியாக செயற்பட்டு வருகின்றது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் 40 க்கும் மேற்பட்ட நாடுகளில் ஆளணியினரைக் கொண்டிருக்கும் ஒரு சா்வதேச நிறுவனமாக இருந்து வருகின்றது. அது அம்ஸ்ரடாம், பெய்ரூட், போ்லின், புருசெல்ஸ், சிக்காக்கோ, ஜெனீவா, கோமா, ஜொகன்னஸ்போ்க், லண்டன், லொஸ் ஏஞ்சல்ஸ், மொஸ்கோ, நைரோபி, நிவ்யோா்க், பாரிஸ், சன்பிரான்சிஸ்கோ, சிட்னி, டோக்கியோ, டொறன்ரோ, டியூனிஸ், வாஷிங்டன் னுஊ மற்றும் சூரிச் ஆகிய இடங்களில் அலுவலகங்களைக் நிறுவியுள்ளது.

மேலும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தயவு செய்து எமது இணையதளத்தை அணுகவும்: http://www.hrw.org

HUMAN
RIGHTS
WATCH

# “ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவையாக இருப்பதில்லை”

## இலங்கையில் பாலின அடையாளம் (Gender Identity) மற்றும் பால்நிலை ஈர்ப்பு (Sexual Orientation) என்பவற்றின் அடிப்படையில் இடம் பெற்று வரும் பாரா பட்சம


**சொல்லகராதி** ........ i

**சாராம்சம்** ........ 1
- சட்டபூர்வமான பாலின அங்கீகாரம் ........ 2
- சட்டத்தில் பாதுகாப்பற்ற நிலை ........ 3
- பால்நிலை அடையாளங்களுடன் ஒத்துப் போகாதவர்களுக்கெதிரான பாராபட்சம் ........ 4
- இலங்கைப் பாராளுமன்றத்துக்கு ........ 7
- அரசியலமைப்புப் பேரவையின் நெறிப்படுத்தல் கமிட்டிக்கு ........ 7
- சுகாதார அமைச்சுக்கு ........ 8
- பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கு ........ 9
- சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுக்கு ........ 10
- பொலிஸாருக்கு ........ 10
- ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் என்பவற்றுக்கு ........ 12
- பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள்.˙.எயிட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டத்துக்கு ........ 12
- இலங்கை மருத்துவப் பேரவை, மருத்துவக் கழகம் மற்றும் மனநல மருத்துவர் கல்லூரி என்பவற்றுக்கு ........ 13

# சொல்லகராதி

**ஈரர் (Bisexual)**: பாலியல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகியோர் மீது பால் ஈர்ப்பைக் கொண்டிருக்கும் ஒரு நபர்.

**சாதாரண பாலினம் (ஊளைபநனெநச):** தாம் பிறந்திருக்கும் பாலினம் (பிறப்பில் அவர்கள் எந்தப் பாலினத்துக்கு உரித்தானவர்களாக இருந்து வருகின்றார்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டார்களோ அந்தப் பாலினம்) அவர்கள் வாழ்ந்து வந்திருக்கும் வாழ்க்கை மற்றும்.ஃ.அல்லது அவர்களின் கருதப்படும் பாலினத்துக்குப் பொருந்துகின்றது என்பதனை விளக்கும் சொல். (குறிப்பிட்ட ஒரு தெரிவில், அவர்கள் தம்மை மிகவும் சௌகரியமான விதத்தில் வெளிப்படுத்திக் கொள்ளும் அல்லது வெளிப்படுத்த விரும்பும் பாலினம்).

**நம்பி (புயல):** உலகின் பல பாகங்களில் தன் பால் ஈர்ப்புக் கொண்டவர்களைக் குறிப்பதற்கென பயன்படுத்தப்பட்டு வரும் பொதுவான சொல் அது இங்கு முதன்மையாக ஏனைய ஆண்கள் தொடர்பாக பாலியல் கவர்ச்சி மற்றும் உணர்வு ரீதியான நெருக்கம் என்பவற்றைக் கொண்டிருக்கும் ஓர் ஆணின் பாலீர்ப்பைக் குறிப்பிடுவதற்கென பயன்படுத்தப்படுகின்றது.

**புாலினம் (புநனெநச):** ஒரு சமூகம் "ஆண்மை" மற்றும் "பெண்மை" நடத்தை எனக் கருதும் நடத்தைகளை வேறுபடுத்திக் காட்டும் சமூக மற்றும் கலாசார நெறிமுறைகளைக் குறிக்கும் சொல்.

**புாலின அடையாளம் (Gender Identity)** தான் பெண்ணாக அல்லது ஆணாக அல்லது இருபாலாரையும் சேர்ந்தவராக அல்லது பெண் அல்லது ஆண் அல்லாத வேறேதேனும் ஒரு பிரிவைச் சேர்ந்தவராக இருந்து வருவதாக ஒரு நபர் தனக்குள் ஆழமாக உணரும் நிலை. அது பிறப்பில் அவருக்கு வழங்கப்பட்டிருக்கும் பாலினத்துடன் கட்டாயமாக ஒத்துப் போக வேண்டிய தேவையைக் கொண்டிருக்கவில்லை.

**பாலினத்துக்குப பொருந்தாத நடத்தை (Gender non-conforming)**: ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்கும் பாலினத்தினை அடிப்படையாகக் கொண்டு சமூகம் அவரிடம் எதிர்பார்க்கும் விடயங்களுடன் முழுமையாக ஒத்துப் போகாத விதத்தில் நடந்து கொள்ளல் அல்லது அத்தகைய தோற்றத்தில் இருத்தல்.

**ஒரு பாலீர்ப்பாளர் குறித்த அதீத அச்சம்:( ர்ழஅழிாழடியை):** ஒரு பாலீர்ப்பாளர்கள் அல்லது ஒரு பாலீர்ப்புத் தன்மைக்கெதிரான அச்சம், நிந்தனை அல்லது பாராபட்சம் காட்டுதல்.

**ஒரு பாலீர்ப்பு /தன் பாலீர்ப்பு (ர்ழஅழளநஒரயட):** முதன்மையாக தனது சொந்தப் பாலினத்தைச் சேர்ந்த நபர்கள் மீது பாலியல் மற்றும் உணர்வு ரீதியான நெருக்கத்தை அனுபவிக்கும் ஒரு நபரின் பாலீர்ப்பு.

**இடைப் பாலினம் (ஐவெநசளநஒ):** “ஆண்” மற்றும் “பெண்” என்ற பொதுவான வரைவிலக்கணங்களுக்குள் பொருந்திச் செல்லாத விதத்தில் இனப்பெருக்க அல்லது பாலியல் உடற் கூற்றுடன் பிறந்திருக்கும் ஒரு நபர்.

**மாறுபட்ட பாலீர்ப்பு மற்றும் பாலடையாளம் கொண்டவர்கள் (LGBTI):** நங்கை(டுநளடியைெ), நம்பி(புயல), ஈரர்( டீளைநஒரயட), திருனர்( வுசயளெபநனெநச) மற்றும் இடைப் பாலினம்( ஐவெநசளநஒ).

**நங்கை (Lesbian):** தனது முதன்மையான பாலீர்ப்பு மற்றும் உணர்வு ரீதியான நெருக்கம் என்பவற்றை ஏனைய பெண்கள் மீது கொண்டிருக்கும் ஒரு பெண்.

**ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் ஆண்கள்( MSM):** ஒரே பாலினத்தைச் சேர்ந்த நபர்களுடன் பாலுறவு கொள்ளும் ஆண்கள்; ஆனால், அவர்கள் தம்மை நம்பி (கே), அல்லது நங்கையாக (லெஸ்பியன்) அடையாளப்படுத்தாமல் இருக்க முடியும். மேலும், ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் ஆண்கள், பெண்களுடனும் பாலுறவு கொள்ள முடியும்; அல்லது கொள்ளாமல் இருக்கவும் முடியும்.

**பாலியல் மற்றும் பாலின சிறுபான்மையினர் ( ளுநஒரயட யனெ புநனெநச ஆiழெசவைநைள):** சமூகத்துடன் ஒத்துப் போகாத பால்நிலை மற்றும் பாலின அடையாளங்களைக் கொண்டிருக்கும் அனைத்து நபர்களையும் உள்ளடக்கும் ஒரு பதம்; இது லெஸ்பியன்கள், நம்பிகள், ஈரர், திருனர், பாலின அடையாளம் ஒன்றுடன் ஒத்துப் போகாத நபர்கள், ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் ஆண்கள் மற்றும் பெண்களுடன் பாலுறவு கொள்ளும் பெண்கள் ஆகியோரை உள்ளடக்குகின்றது.

**பாலீர்ப்பு (ளுநஒரயடழுசநைவெயவழைெ):** ஒரு நபரின் பாலியல் மற்றும் உணர்வு ரீதியான இச்சைகள் நெறிப்படுத்தப்பட்டிருக்கும் விதம். குறிப்பிட்ட ஒரு நபர் முதன்மையாக அதே பாலினத்தைச் சேர்ந்த நபர்கள் தொடர்பாக ஈர்க்கப்பட்டுள்ளாரா அல்லது எதிர்ப்பாலினத்தைச் சேர்ந்த நபர்கள் தொடர்பாக, இரு பாலினங்களையும் சேர்ந்த நபர்கள் தொடர்பாக ஈர்க்கப்பட்டுள்ளாரா அல்லது எவர் மீதும் ஈர்ப்பில்லாதவரா என்பதை விளக்கும் சொல்.

**பாலின மாற்று அறுவை சிகிச்சை (SRS):** ஒரு நபரின் உடலை, அவருடைய பாலின அடையாளத்தைப் பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் மாற்றியமைக்கும் அறுவை சிகிச்சை நடைமுறைகள். இத்தகைய அறுவை சிகிச்சைகள் ஒரு சில ஆட்களுக்கு மருத்துவ ரீதியில் அவசியமாக இருந்து வருகின்றன; எவ்வாறிருப்பினும், அனைத்து நபர்களும் அத்தகைய அறுவை சிகிச்சைகளை விரும்புவதில்லை; அவை அவர்களுக்குத் தேவைப்படுவதுமில்லை; அல்லது தமது நிலைமாற்றத்தின் ஒரு பாகமாக ஓர் அறுவை சிகிச்சையை செய்து கொள்ள அவர்கள் முன்வருவதில்லை.

**பாலியல் தொழில் (Sex Work):** சம்மதத்துடன் செயற்படும் வயது வந்த நபர்களுக்கு மத்தியில் பாலியல் சேவைகளை வர்த்தக அடிப்படையில் பரிமாறிக் கொள்ளும் தொழில்.

**திருனர் (Transgender):** ஒருவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பாலினம் (அதாவது பிறப்பின் போது பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் பாலினம்) அவர் வாழ்ந்து வரும் விதத்துக்குப்

பொருந்தாதிருந்து வருவதனை (குறிப்பிட்ட ஒரு நிலையில் அவர் தன்னை மிகவும் எளிதாக வெளிப்படுத்திக் கொள்ளும் அல்லது வெளிப்படுத்திக் கொள்ள விரும்பும் பாலினத்துடன் பொருந்தாதிருப்பதனை) குறிக்கும் ஒரு சொல். திருனரான ஒரு நபர் பொதுவாக தான் விரும்பித் தெரிவு செய்து கொள்ளும் பாலினத்துக்குப் பொருத்தமான நடத்தையை மேற்கொள்வார்; அல்லது மேற்கொள்ள விரும்புவார். தாம் விரும்பும் பாலினத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தமது உடற் கூறுகளை நிரந்தரமாக மாற்றியமைத்துக் கொள்வதற்கு அவர்கள் விரும்பலாம்; அல்லது விரும்பாமலிருக்கலாம்.

**திருனர்கள் குறித்த அதீத அச்சம் (Transphobia)**: வழமையான எதிர்மறையான வகை மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு திருனர் நபர்களுக்கெதிரான அச்சம், கண்டனம் அல்லது பாரபட்சம் காட்டும் நிலை.

# சாராம்சம்

ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை…மக்கள் எவ்விதம் இருந்து வருகின்றார்களோ அவ்விதம் அவர்களுக்கு மதிப்பளிக்கப்படுதல் வேண்டும்.

- தெகான், 43 வயது நம்பி, கொழும்பு, 2015

இலங்கையில் இரு சட்டகங்கள் இருந்து வருகின்றன: ஆண் மற்றும் பெண். நீங்கள் ஒரு ஆணாகப் பிறந்திருந்தால் ஒரு அதிர்ஷ்டசாலியாக இருந்து வருகின்றீர்கள் என சமூகம் கருதுகின்றது. நீங்கள் உங்கள் ஆண்மையை விட்டுக் கொடுத்தால் நீங்கள் பாவியாக இருந்து வருகின்றீர்கள்.

- பூமி, 25 வயது திருனர், கொழும்பு, அக்டோபர் 2015

அவர்களுடைய வார்த்தைகள் ஊசிகளிலும் பார்க்க அதிகம் எம்மைக் குத்திக் கிழிப்பவையாக இருந்து வருகின்றன.

- கிரிசான், 40 வயது நம்பி, கொழும்பு, அக்டோபர் 2015, அரசாங்க வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் பணிபுரிந்து வரும் புதவியணியினர் தொடர்பாக.

இலங்கையில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் புலப்பட வேண்டிய விதம் மற்றும் நடந்து கொள்ள வேண்டிய விதம் என்பன தொடர்பாக ஆழமாக வேரூன்றியிருக்கும் கருத்துக்கள் இருந்து வருகின்றன. இந்தப் பாலினம் தொடர்பான நெறிமுறைகளுக்கு சவால் விடுக்ககும் ஆட்கள் - பெருந்தொகையான நங்கைகள், நம்பிகள், ஈரர்கள், திருனர்கள் மற்றும் இடைப் பால்நிலைத்தைச் சேர்ந்த (LGBTI) ஆட்கள் - அரச அதிகாரிகள் மற்றும் தனிஆட்கள் ஆகிய தரப்புக்களிடமிருந்து பல்வேறு துஷ்பிரயோகங்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருந்து வருகின்றனர். அத்தகைய துஷ்பிரயோகங்கள் அவர்களின் நாளாந்த வாழ்க்கையின் தரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றைப் பாதிப்பதுடன், தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதில் மையமாக இருந்து வரக்கூடிய சேவைகளை அணுகுவதற்கான அவர்களுடைய ஆற்றலையும் குறைத்து விடுகின்றன.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) 2015 அக்டோபர் மாதம் தொடக்கம் 2016 ஜனவரி மாதம் வரையில் இலங்கையின் 4 நகரங்களில் மாற்றுப் பால்நிலை ஈர்ப்பு அடையாளங்களைக் கொண்டிருக்கும் 61 நபர்களுடன் (LGBTI) நடத்திய நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்ட அறிக்கை திருனர் வகையைச் சேர்ந்த (வுசயளெபநனெநச) ஆட்கள் அனுபவித்து வரும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக முதன்மையாகக் கவனம் செலுத்துகின்றது – தன்னிச்சையான தடுத்து வைப்பு, துன்புறுத்தல், சுகாதார சேவைகள், தொழில், வீட்டு வசதிகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதில் பாரபட்சம் காட்டப்படுதல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது. மேலும், இந்த அறிக்கை ஒரு ஆளின் உண்மையான அல்லது கருதப்படும் பாலுனர்வை அடிப்படையாகக் கொண்டு, அந்தஆட்கள் அனுபவித்து வரும் பாரபட்சங்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பான உதாரணங்களையும் உள்ளடக்குகின்றது. அத்தகைய பாரபட்சங்கள், துஷ்பிரயோகங்கள் என்பவற்றில் பெரும்பாலானவை குறிப்பிட்ட பாலின அடையாளத்துடன் ஒத்துப் போகாத ஆட்கள் சம்பந்தப்பட்டவையாக இருந்து வருகின்றன.

திருனர் வகையைச் சேர்ந்த ஆட்களின் பாலின அடையாளத்தை அங்கீகரிப்பதற்குத் தவறும் பரவலான ஒரு சட்டக் கட்டமைப்புக்குள் இடம்பெற்று வரும் துஷ்பிரயோகங்களை இந்த அறிக்கை கலந்துரையாடுகின்றது; இந்தச் சட்டக் கட்டமைப்பு சம்மதத்துடன் செயற்படும் வயது

வந்தவர்களுக்கிடையில் இடம்பெறும் ஒரு உடல் உறவினை ஒரு குற்றச் செயலாகக் கருதுகின்றது; மாற்றுப் பாலுனர்வுகளைக் கொண்டிருக்கும் ஆட்களுக்கெதிராக பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களை நிகழ்த்துவதற்கான இயலுமையையும் இந்தச் சட்டத் தொகுப்பு பெற்றுக் கொடுக்கின்றது.

இறுதியாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்த வழிமுறைகளை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகின்றது. மாற்றுப் பாலுனர்வினைக் கொண்டிருக்கும் ஆட்கள் வன்முறை மற்றும் பாரபட்சம் என்பன இல்லாத ஒரு சூழ்நிலையில் சுதந்திரமாக வாழும் விதத்தில் அவர்களுடைய மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கென நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் மற்றும் பாதுகாப்புத் துறைச் சீர்திருத்தங்கள் என்பவற்றை அமுல் செய்தல் மற்றும் ஒரு புதிய அரசியல் யாப்பை ஏற்றுக்கொள்ளல் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் இந்த வழிமுறைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

## சட்டபூர்வமான பாலின அங்கீகாரம்

இலங்கையின் சட்டம் ஒருவரின் சட்டபூர்வமான பாலினத்தை மாற்றுவதற்கான ஒரு வழியை வழங்கவில்லை – எனினும், பால்நிலை அங்கீகார நடைமுறைகள் தற்பொழுது பரிசீலனையில் இருந்து வருகின்றன.

இலங்கையில் திருனர் வகையைச் சேர்ந்த ஆட்கள் தாம் விரும்பும் பெயர் மற்றும் பால்நிலை என்பவற்றைப் பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் ஒரு தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதும், ஏனைய உத்தியோகபூர்வமான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதும், பெருமளவுக்கு சிரமமான ஒரு காரியமாக இருந்து வருகின்றது. இது அவர்களின் பால்நிலை அடையாளம் குறித்த தொடர்ச்சியாக இழிவுபடுத்தும் விதத்திலான உன்னிப்பான கண்காணிப்புக்கு அவர்களை உட்படுத்துகின்றது – சோதனைச் சாவடிகளிலிருக்கும் பொலீஸார், அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் ஊழியர்கள், தொழில் தருனர்கள், விமான நிலைய ஊழியர்கள் மற்றும் காசாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய தரப்பினர் இவ்விதம் இவர்களை இழிவுபடுத்தி வருகின்றனர்.

தமது உத்தியோகபூர்வ அடையாள ஆவணங்களில் பால்நிலை வகைப்படுத்தலை மாற்றிக் கொள்ள விரும்பும் (Transgender என அழைக்கப்படும்) திருனர் பிரிவைச் சேர்ந்த ஆட்கள் அதிகார வர்க்க கெடுபிடியின் பல்வேறு விதமான தடைகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. அரசாங்க அலுவலர்கள் அத்தகைய விண்ணப்பங்களை அசட்டையான விதத்தில் கையாள்கின்றனர்; நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் கருத்துக்களின் பிரகாரம், உத்தியோகபூர்வ ஆவணங்களில் பால்நிலையினை மாற்றுவது தொடர்பான விண்ணப்பங்களை ஒரு சில அதிகாரிகள் முழுமையாக நிராகரித்துள்ளார்கள். வேறு சில சம்பவங்களில் நிறுவனங்கள் அவர்களை தன்னிச்சையான, மிகக் கடுமையான, தொந்தரவு மிக்க நடைமுறைகளுக்கு உள்ளாக்கி வருகின்றன – அதாவது, அவர்கள் பால்நிலை நிலைமாற்றம் மற்றும் பால்நிலை மாற்று சத்திர சிகிச்சை என்பன தொடர்பான சான்றுகளை சமர்ப்பித்தல், அவர்கள் ஒரு பிள்ளையாக எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதனை எடுத்து விளக்கும் பெற்றோரின் கடிதங்களை முன்வைத்தல் மற்றும் தமது பால்நிலை நிலைமாற்றம் தொடர்பாக பல்வேறு அதிகாரிகளிடம் மீண்டும் மீண்டும் விளக்கங்களை அளிக்க வேண்டிய நிலைமைக்கு உட்படுதல் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது.

இலங்கையில் வாழ்ந்து வரும் ஒரு சில திருனர்கள் இந்த நிலைமையினால் விரக்தியுற்றவர்களாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழு இதற்கு மாறாக விதத்தில் “பால்நிலை அங்கீகார சான்றிதழ்” (Gender Recognition Certificate) ஒன்றை வழங்கும் விடயத்தை ஒரு யோசனையாக முன்வைத்துள்ளது. அச் சான்றிதழ் தனி ஆட்கள் தமது பிறப்புச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டைகள் மற்றும் கடவுச்சீட்டுக்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய உத்தியோகபூர்வமான ஆவணங்களில் காட்டப்பட்டிருக்கும் பால்நிலையினை மாற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை வழங்கும். சுகாதார அமைச்சு 2016 யூன் மாதத்தில் பல்வேறு சுகாதார சேவை அமைப்புக்களுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் ஒரு நிறுபத்தை அனுப்பி வைத்துள்ளது. திருனர் பிரிவைச் சேர்ந்த ஆட்களுக்கு பால்நிலை அடையாளச் சான்றிதழை வழங்குவது தொடர்பான வழிகாட்டுதல்கள் அச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசிக்கப்பட்டிருக்கும் சான்றிதழ் தொடர்பாக 2016 யூலை மாதமளவில் பதிவாளர் நாயகம் திணைக்களத்திடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது[1].

உத்தேச சான்றிதழ் ஒரு முக்கியமான படிமுறையாக இருந்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், இச்சுற்றறிக்கையின் ஒரு சில தேவைகள் - மருத்துவ சிகிச்சை தொடர்பான சான்று மற்றும் மனநல மருத்துவர் ஒருவரிடமிருந்து பெறப்படும் சான்றிதழ் என்பவற்றை உள்ளடக்கிய தேவைகள் - மருத்துவ சத்திர சிகிச்சை அல்லது மனநல ஆரோக்கிய சிகிச்சை அல்லது நோய்க்குறி அடையாளம் என்பன சட்டபூர்வமான பால்நிலை மாற்றத்துக்கு அவசியமாக இருந்து வரவில்லை எனப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் மிகச் சிறந்த நடைமுறைகளுக்கு புறம்பானவையாக இருந்து வருகின்றன.

## சட்டத்தில் பாதுகாப்பற்ற நிலை

இலங்கையின் திருனர் குடித்தொகையினரை அல்லது இடைப் பால்நிலை குடித்தொகையினரை எந்தவொரு சட்டமும் திட்டவட்டமாக குற்றம் புரிபவர்களாக குறித்துரைக்கவில்லை. ஆனால், அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்படுவதனை எந்த ஒரு சட்டமும் உத்தரவாதப்படுத்தவில்லை; பொலீஸார் மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் கொண்ட நபர்களை (நங்கை/நம்பி/ஈரர்/திருனர்/இடைப்பால்நிலைத்தவர் ஆகியோரை) இலக்காகக் கொண்டு பல்வேறு குற்றவியல் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றை பிரயோகித்து வந்துள்ளனர். குறிப்பாக, பாலியல் தொழிலில் ஈடுபட்டு வரும் திருனர் பெண்கள் மற்றும் ஆண்களுடன் பாலுறவு கொள்ளும் ஆண்கள் (MSM) ஆகியோரை பொலீஸ் இலக்கு வைத்துள்ளது. இது “ஆள்மாறாட்டம் செய்வதன் மூலம் ஏமாற்றுவதற்கு” எதிரான ஒரு சட்டத்தையும், தெளிவற்ற விதத்திலான சொற் பிரயோகங்களை கொண்டிருக்கும் அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டத்தையும் உள்ளடக்குகின்றது. அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டம் “அப்பட்டமான விதத்திலான அசிங்கமான செயல்களுக்கு” பரிந்து அழைத்தல் அல்லது அவற்றை நிகழ்த்துதல் அல்லது “சட்டவிரோதமான அல்லது இயற்கைக்கு மாறான புணர்ச்சியை” நிகழ்த்துவதற்கு ஆள் பிடிக்கும் “திருத்த முடியாத அயோக்கியர்களின்” செயல்கள் என்பவற்றைத் தடை செய்கிறது.

இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 365 மற்றும் 365ஏ என்பன “இயற்கைக்கு மாறான பாலியல் இன்பம்” மற்றும் “அப்பட்டமான அசிங்கம்” என்பவற்றைத் தடை செய்கின்றன.

---

[1] மனித உரிமை கண்காணிப்பகம் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த மேனகா ஹேரத் அவர்களுடன் நடத்திய மின்னஞ்சல் தொடர்பு, யூலை 7, 2016

அதாவது, இலங்கையில் சம்மதத்துடன் செயற்படும் வயது வந்தவர்களுக்கு மத்தியில் இடம்பெறும் உடலுறவுச் செயல்கள் குற்றங்களாகக் கருதப்படுகின்றன என பொதுவாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது. இத்தகைய சட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்ட குற்றவியல் குற்றங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுடன் இணைந்து, அரசாங்க அதிகாரிகளும், பொதுமக்களும் இந்த மாறுபட்ட பால்உணர்வு மற்றும் பால்நிலை அடையாளம் கொண்ட (LGBTI) நபர்களை பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்குவதற்கு இயலச் செய்கின்றன.

ஒரு சில திருனர் பெண்கள் மற்றும் ஆண்களுடன் உடல் உறவு கொள்ளும் ஆண்கள் ஆகியோர் தாம் மீண்டும் மீண்டும் பொலீஸாரின் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகக் கூறியிருந்தார்கள். தன்னிச்சையான விதத்தில் தடுத்து வைத்தல் மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும் துன்புறுத்தல்கள் என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது. இந்நிலைமை இலங்கை அதிகாரிகள் மீதான அவர்களுடைய நம்பிக்கையை இல்லாமல் செய்திருப்பதுடன், அவர்கள் ஒரு குற்றம் தொடர்பாக அறிக்கையிடக் கூடிய சாத்தியத்தையும் இல்லாமல் செய்துள்ளது. “என்னைப் போன்ற ஒருவரை அவர்கள் பாதுகாக்க மாட்டார்கள்” என கொழும்பைச் சேர்ந்த 25 வயது திருனர் பெண்மணி ஒருவரான பாத்திமா கூறினார். அவர் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன் 2012 ஆம் ஆண்டில் குண்டர்கள் தாக்கப்பட்டதை அடுத்து, அவர் அது குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யவில்லை.

## பால்நிலை அடையாளங்களுடன் ஒத்துப் போகாதவர்களுக்கெதிரான பாராபட்சம்

திருனர் வகையைச் சேர்ந்த ஆட்கள் எதிர்கொண்டு வரும் துஷ்பிரயோகங்கள், இலங்கையில் பால்நிலை அடையாளங்களுடன் ஒத்துப் போகாமலிருக்கும் ஆட்கள் எதிர்கொண்டு வரும் பாராபட்சம் தொடர்பான பரவலான சரித்திரத்தின் ஒரு பாகமாகும். பொதுவாக, நங்கை/நம்பி/ஈரர்/திருனர்/இடைப்பால்நிலைத்தவர் (LGBTI) ஆகிய தரப்புக்கள் வீடமைப்பு, தொழில் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு என்பவற்றைப் பொறுத்தவரையில் அரசாங்கத் துறையிலும், அதேபோல தனியார் துறையிலும் புறமொதுக்கப்படும் நிலையையும், பாரபட்ச நிலையையும் எதிர்கொண்டு வருகின்றார்கள். “அவர்களுடைய வார்த்தைகள் ஊசிகளிலும் பார்க்க அதிகமாக எம்மைக் குத்திக் கிழிக்கக் கூடியவையாக இருந்து வருகின்றன” என தன்னிடம் தேவையற்ற கேள்விகளைக் கேட்ட அரசாங்க வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்கள் என்பவற்றின் புதவியணியினர் குறித்து திருனர் ஒருவர் கூறினாா[2].

இது மறுபுறத்தில் மிகப் பாரதூரமான சமூக மற்றும் சுகாதாரத் தாக்கங்களை எடுத்து வர முடியும். அது எச்ஐவி தொற்றைத் தடுத்தல் மற்றும் சிகிச்சையை மேற்கொள்வதற்கான வசதியைத் தடுப்பதனையும் உள்ளடக்குகின்றது: திருனர் ஆட்கள் மற்றும் ஆண்களுடன் உடல் உறவு கொள்ளும் ஆண்கள் ஆகியோர் எச்ஐவி தொற்றினைக் கவனத்திலெடுக்கும் விடயத்தில் முதன்மையான பிரிவினர்களாக இருந்து வருகின்றனர் என இலங்கையின் சுகாதார முகவரகங்கள் அடையாளம் கண்டுள்ளன[3].

[2] மனித உரிமைகள் கண்காணிப்பகம் கிரிசான் (புனைபெயர்) என்பவருடன் நடத்திய நேர்காணல், கொழும்பு, அக்டோபர் 26, 2015

[3] பாலியல் ரீதியில் பரவும் நோய்கள்.்.எயிட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித் திட்டம், “இலங்கையில் எச்ஐவி.்.எயிட்ஸ் மற்றும் பாலியல் ரீதியில் பரப்பப்படும் தொற்றுக்கள் என்பவற்றுக்கான தேசிய எதிர்வினை: நடுத்தர கால மீளாய்வு 2013 – 2017 தேசிய உபாய ரீதியான திட்டம்”, ஜனவரி.்.பெப்ரவரி 2015,
ாவவி:.்..்.நறந.யனைளஉழவெசழட.பழஎ.டம.்.நநடி.்.ைஅயபநள.்.நநடிூரிடழயனள.்.புரனைநடைநௌஃசுநிழசவளீரடிடைஉயவழைளெ.்.2015மூ20ஆனைமூ20வுநசஅமூ20சுநஎநைறமூ20சுநிழசவமூ20ழகமூ20வாநமூ20ளுசமைூ20டுயமெயமெூ20யேவழைெடமூ20ளுவசயவநபஉைமூ20ீடயமெூ20கழசமூ202013-2017.னக (“முதன்மையான குடித்தொகைப் பிரிவினருக்கான தடுப்புச் சேவைகளின் அடிப்படையான அபிவிருத்தியை கவனத்திலெடுப்பதுடன்”

நங்கை, நம்பி, ஈரர், திருனர் மற்றும் இடைப்பால்நிலை வகையைச் சேர்ந்த ஆட்கள் எதிர்கொள்ளும் பாரபட்சத்தைப் பொறுத்தவரையில் சமூக மதிப்பு மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வருகின்றது: வறியவர்களாகவும், பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்களாகவும் இருந்து வருபவர்கள் அல்லது கண்டிப்பான பால்நிலை நெறிமுறைகளுக்கு வெளிப்படையாக இணங்கி நடக்காத ஆட்கள் மிக எளிதில் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகக் கூடியவர்களாக இருந்து வருகின்றார்கள். உடல் ரீதியான தாக்குதல் மற்றும் கைது என்பவற்றையும் இது உள்ளடக்குகின்றது.

***

மகிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்ததனை அடுத்து, இலங்கையில் ஒரு புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இப்பொழுது இலங்கையில் அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயன்முறையொன்று இடம்பெற்று வருகின்றது. இது அரசியலமைப்பின் சமமான பாதுகாப்பு உறுப்புரைக்குள்ளேயும், தற்பொழுது அரசியலமைப்பின் வரையில் இல்லாதிருந்து வரும் சர்வதேச சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டிருக்கும் வாழ்வதற்கான உரிமை, சுகாதாரத்துக்கான உரிமை மற்றும் அந்தரங்கத்தைப் பேணுவதற்கான உரிமை என்பவற்றையும் உள்ளடக்கிய ஏனைய அடிப்படை உரிமைகளிலும் பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றை உள்ளடக்கிக் கொள்வதற்கான தெளிவான ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.

ஒரே பால்நிலைக்கு உரியவர்களுக்கிடையிலான உடலுறவுச் செயற்பாடுகளை குற்றச் செயல்களாகக் கருதும் குற்றவியல் சட்டத்தின் ஏற்பாடுகளை உடனடியாக நீக்குவதற்கு இலங்கைப் பாராளுமன்றம் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும். ஆட்களின் பால்நிலை வெளிப்பாடு, பால்நிலை அடையாளம் அல்லது உடலுறவு ஆசை என்பன என்னவாக இருந்து வந்த போதிலும், அனைத்து மக்களினதும் உரிமைகளை மதிப்பதற்கான தமது கடமை குறித்து பொலிஸாருக்கு மதியுனர்வுடன் கூடிய பயிற்சியும், தெளிவான வழிகாட்டுதல்களும் வழங்கப்படுதல் வேண்டும். அவர்கள் இந்த உரிமைகளை நிலைநிறுத்தத் தவறும் சந்தர்ப்பங்களில் அதற்கென பொறுப்புக் கூற வைக்கப்பட முடியும். சுகாதாரக் கட்டமைப்புக்குள் செயற்பட்டு வரும் மருத்துவர்கள், தாதிமார், ஏனைய மருத்துவச் செயற்பாட்டாளர்கள் மற்றும் துணை நிலை ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும் இலங்கையில் வசித்து வரும் மாறுபட்ட பால்நிலை ஆசை மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் (LGBTI) சமூகத்தினரின் உச்ச மட்ட சுகாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை நிலைநிறுத்துவதற்கென சிறந்த பயிற்சி, வழிகாட்டுதல்கள் மற்றும் பொறுப்புக் கூறும் பொறிமுறைகள் என்பன எடுத்து வரப்படுதல் வேண்டும்.

தனது நாட்டின் எல்லைக்குள் வசித்து வரும் அனைத்து மக்களினதும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கான பொறுப்பினை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. நங்கை, நம்பி, ஈரர்,திருனர் மற்றும் இடைப்பால்நிலைத்தைச் சேர்ந்த ஆட்கள் ஆகியோர் எதிர்கொண்டு வரும் வன்முறை மற்றும் பாதுகாப்பற்ற நிலை என்பவற்றை மிகவும் தாக்கமான விதத்தில் கவனத்திலெடுக்க வேண்டிய பொறுப்பினையும் இது உள்ளடக்குகின்றது. இலங்கையர் அனைவரும் - அவர்களுடைய பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை ஈர்ப்பு என்பன என்னவாக இருந்து வந்த போதிலும் - அதே மரியாதை, பாதுகாப்பு மற்றும் உரிமைகளை முழுமையாக அனுபவிக்கும் நிலை என்பவற்றுக்கான உரித்தினைக் கொண்டுள்ளனர் என்ற மிகத்

மற்றும் "பாலியல் தொழிலாளர்கள், ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள் மற்றும் திருனர், போதைப்பொருள் பாவனையாளர்கள் ஆகியோரைக் கவனத்திலெடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றன") அணுகிய திகதி யூலை 20, 2016

தெளிவான ஒரு செய்தியை அதிகாரிகள் சட்டத்தை அமுல் செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், சாதாரண பிரஜைகளுக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

# முழுமையான பரிந்துரைகள்

## இலங்கைப் பாராளுமன்றத்துக்கு

- பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதனையும் உள்ளடக்கிய விதத்தில் பாரபட்சத்தை தடை செய்யும் அனைத்துமடங்கிய பாரபட்ச எதிர்ப்புச் சட்டவாக்கத்தை நிறைவேற்றி வைத்தல் வேண்டும் அது அத்தகைய பாரபட்சத்தை அடையாளம் கண்டு, தடுத்து எதிர்வினையாற்றுவதற்கான வினைத்திறன் மிக்க வழிமுறைகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.
- சம்மதத்துடன் செயற்படும் வயது வந்தவர்களுக்கு மத்தியில் இடம்பெறும் ஓரின பாலுறவுச் செயற்பாடுகளை குற்றச் செயல்களாகக் கருதும் இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் 365 மற்றும் 365ஏ என்பன நீக்கப்படுதல் வேண்டும் ஒரு சில தன்மையிலான பாலியல் தொழிலை குற்றச் செயலாகக் கருதும் பிரிவு 360ஏ நீக்கப்படுதல் வேண்டும் திருனர் பிரிவைச் சேர்ந்த ஆட்களையும், பாலியல் தொழிலாளர்களையும் குற்றமிழைத்தவர்களாகக் கருதி, அவர்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டம் நீக்கப்படுதல் வேண்டும் பாலியல் தொழிலாளர்களைக் குற்றமிழைப்பவர்களாக கருதுவதற்கு பயன்படுத்தக்கூடிய விபச்சார விடுதிகள் கட்டளைச் சட்டம் நீக்கப்படுதல் வேண்டும்.
- சர்வதேச தர நியமங்களுக்கு இணங்கி நடக்கும் விதத்திலான சுயாதீனமான முறைப்பாடுகள் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும். மாறுபட்ட பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை என்பவற்றைக் கொண்டவர்களையும் (LGBTI) உள்ளடக்கிய விதத்தில் பொலீஸாரின் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்படுபவர்கள் முழுமையான இரகசியத் தன்மைக்கு உத்தரவாதமளிக்கக் கூடிய விதத்திலும், அந்தரங்கத் தன்மைக்கான தமது உரிமை மதிக்கப்படும் விதத்திலும் பொலிஸாரின் துன்புறுத்தல் தொடர்பான சம்பவங்களை அறிக்கையிடுவதற்கென இப்பொறிமுறை உருவாக்கப்படுதல் வேண்டும்.

## அரசியலமைப்புப் பேரவையின் நெறிப்படுத்தல் கமிட்டிக்கு

- புதிய அரசியலமைப்பின் பாராபட்சம் காட்டாத மற்றும் ஏற்பாடுகளின் பாதுகாக்கப்பட்ட பண்புக் கூறுகளாக இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் அத்தகைய ஏனைய விடயங்களுடன் இணைந்த விதத்தில் பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பனவற்றையும் வெளிப்படையாக உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.
- சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் மற்றும் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் என்பன தொடர்பான ஓர் அரச தரப்பு என்ற முறையில் இலங்கையின் கடப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில், புதிய அரசியலமைப்பின் வரைவில் வாழ்வதற்கான உரிமை, அந்தரங்கத்தைப் பேணுவதற்கான உரிமை மற்றும் சாதித்துக் கொள்ளக் கூடிய உச்ச நிலை சுகாதார நிலையைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை என்பன உள்ளடக்கப்படுவது உத்தரவாதப்படுத்தப்படுதல் வேண்டும்.

## நீதி அமைச்சுக்கு

- பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் பாரா பட்சம் காட்டப்படுவதனை சட்டவிரோதமான ஒரு செயலாகக் கருதும் ஏற்பாடுகளை உள்ளடக்கிய விதத்தில், அனைத்துமடங்கிய பாரபட்சம் காட்டுவதற்கு எதிரான சட்டவாக்கத்தின் வரைபைத் தயாரிக்கவும்.
- பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் அந்தரங்கத்தைப் பேணுதல் மற்றும் பாரபட்சம் காட்டாதிருத்தல் என்பன தொடர்பான கடப்பாடுகளைப் பின்பற்றுமாறு அரசாங்கத்துக்கும், இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச ஒப்பந்தக் கடப்பாடுகளில் சம்பந்தப்பட்டிருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கவும்.

## சுகாதார அமைச்சுக்கு

- சர்வதேச தர நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பவற்றின் பிரகாரம், மருத்துவ நடைமுறைகள் அல்லது பலவந்தம் என்பன இல்லாத நிலையில், சுய பிரகடனம் செய்யும் செயன்முறை ஒன்றுக் கூடாக அனைத்து ஆவணங்களிலும் தமது சட்டபூர்வமான பால்நிலையை மாற்றிக் கொள்வதற்கு ஆட்களுக்கு இடமளிக்கும் பால்நிலை அங்கீகார நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்து வைத்து, அதனை அமுல்படுத்தவும். அத்தகைய பால்நிலை அங்கீகார நடைமுறை, ஆவணங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், அந்தரங்கத் தன்மை மற்றும் கண்ணியம் என்பவற்றை பாதுகாக்கும் விதத்தில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். பல்வேறு பின்னணிகளிலிருந்தும் எடுக்கப்பட்ட திருனர் மற்றும் இடைப் பால்நிலையை சேர்ந்த ஆட்கள், திருனர் மற்றும் இடைப்பால்நிலை நபர்களுடன் பணி புரிந்து அனுபவத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் ஏனைய நிபுணர்கள் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய தரப்பினரையும் உள்ளடக்கிய பல்வேறு குழுக்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொண்டு, இந்தச் செயன்முறை அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.
- எச்ஐவி தொடர்பான கல்வி, எச்ஐவி தடுப்பு, உளவளத்திணை வழங்குதல், பரிசோதனை செய்தல், குறிப்பாக இக் குழுக்களை இலக்காகக் கொண்ட சிகிச்சைகள் என்பவற்றில் திருனர்கள் மற்றும் ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள் ஆகியோரை வினைத்திறன் மிக்க விதத்தில் பங்கேற்கச் செய்யவும்
- மருத்துவர்கள், தாதிமார்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் ஆகிய அனைவருக்குமான பயிற்சி, மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்ட ஆட்கள் (டுபுடீவுஐ) தொடர்பாக பாராபட்சம் காட்டாதிருத்தல் மற்றும் அவர்களுடைய சுகாதாரப் பிரச்சினைகள் என்பவற்றை உள்ளடக்கும் ஒரு கூறினையும் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்தவும்.
- மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால் அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் (டுபுடீவுஐ) நபர்களைப் பாதிக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக சேவைகளை வழங்கும் நிபுணர்களும், சேவைகளும் இலங்கையில் கிடைப்பதனையும், அணுகக் கூடிய நிலையில் இருந்து வருவதனையும் உறுதிப்படுத்தவும். அத்தகைய நிபுணர்களையும், சேவைகளையும் எவ்வாறு

அணுகுவது என்பது தொடர்பான தெளிவான வழிகாட்டுதல்கள் மருத்துவ ஆளணியினருக்கும், நோயாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

- மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் நபர்களுக்கெதிரான (டுபுடீவுஐ) மனத் தடைகளைக் களைவதனை நோக்காகக் கொண்டு சனசமூக அமைப்புக்களுடன் கூட்டாக இணைந்து சுகாதாரப் பணியாளர்களுக்கு உணர்வூட்டும் நிகழ்சித்திட்டங்களை ஏற்பாடு செய்யவும்.
- சர்வதேச மருத்துவ கருத்தொற்றுமைக்கு இணங்கிய விதத்தில் தன் பால் ஈர்ப்பு, கவர்ச்சி, நடத்தை மற்றும் திருனர் அடையாளம் என்பன மருத்துவ நோய்க் கூறுகளாக இருந்து வரவில்லை என்பதனை எடுத்து விளக்கும் விதத்தில் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கவும்.
- மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் (LGBTI) நபாகளின் (மனநலத் தேவைகளையும் உள்ளடக்கிய விதத்தில்) சுகாதாரத் தேவைகள் குறித்த தேவை மதிப்பீடுகளை நடத்தவும் அத்தகைய தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்யவும். அத்தகைய மதிப்பீடு, மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் நபர்களின் அந்தரங்கத் தன்மை மற்றும் கண்ணியம் என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய ஒரு மதிப்பீட்டில் அவர்கள் பங்கேற்க விரும்பினால் தாமாகவே முன்வந்து பங்கேற்பதற்கான தெரிவு அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும் மேலும், அநாமதேயமாக இருந்து வருதல் மற்றும் அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ளல் என்பவற்றுக்கான தெரிவுகளும் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேணடும்.
- சுகாதார சேவைகள் மற்றும் ஏனைய அரசாங்க சேவைகள் என்வற்றை அணுகுவதில் பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் ஆட்களுக்குக் காட்டப்பட்டு வரும் பாரபட்சத்தை எதிர்க்கும் விதத்தில் வலுவான பகிரங்க அறிக்கைகளை வெளியிடவும்.
- எச்ஐவி தடுப்பு மற்றும் சிகிச்சைச் சேவைகள் என்பவற்றை அணுகும் வசதியை விருத்தி செய்யும் பொருட்டு, தன்னினச் சேர்க்கை நடத்தையை குற்றச் செயலாக்கும் நிலையை நீக்குவதற்குப் பரப்புரை செய்யவும்.

## பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கு

- தாமாக அடையாளம் கண்டு கொண்டிருக்கும் நங்கை (டுநளடியைெ) இருபால்நிலை ஈர்ப்புப் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோருடைய தேவைகளையும், பெண்களுடனும் ஏனைய திருனர் வகை ஆட்களுடனும் உடலுறவு கொள்ளும் பெண்களின் தேவைகளையும் நிறைவேற்றிப் வைப்பதற்கென மாறுபட்ட பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றைக் கொண்ட நபர்களுடனும் (LGBTI), பெண்கள் அமைப்புக்களுடனும், செயற்பாட்டாளர்களுடனும் கலந்தாலோசனையொன்றை ஏற்பாடு செய்யவும்.
- தாமாகவே அடையாளம் கண்டு கொண்டிருக்கும் நங்கை மற்றும் இருபால்நிலை ஈர்ப்புப் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரும், அதேபோல பெண்களுடனும் திருனர் வகை ஆட்களுடனும் உடலுறவு கொள்ளும் பெண்களும்

அமைச்சின் பணிப்பாணையிலும், அதன் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிலும் உள்ளடக்கப்படுவதனை தெளிவுபடுத்தவும்.

## சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுக்கு

- பொலீஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் தமது கடமைகளை நிறைவேற்றி வைக்கும் பொழுது பால்நிலை வெளிப்பாடு, அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காட்டப்படும் பாரபட்சத்தையும் உள்ளடக்கிய விதத்தில் பாரபட்சத்துக்கு உட்படாதிருத்தல், சமத்துவம், அந்தரங்கம் என்பவற்றுக்கான உரிமைகளை மதிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பொருத்தமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ளவும்.

## பொலிஸாருக்கு

- தமது கடமைகளை நிறைவேற்றி வைப்பதில் பால்நிலை வெளிப்பாடு மற்றும் அடையாளம், பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையிலான பாரபட்சத்தை உள்ளடக்கிய விதத்தில் பாரபட்சத்துக்கு உட்படாதிருத்தல், சமத்துவம், அந்தரங்கம் மற்றும் வேறுபடுத்திப் பார்க்காதிருத்தல் என்பவற்றுக்கான உரிமைகளை மதிப்பதை அனைத்துப் பொலீஸ் உத்தியோகத்தர்களும் உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்துப் பொருத்தமான வழிமுறைகளையும் மேற்கொள்ளவும்.
- பாரபட்சத்துக்கு உட்படாதிருத்தல், சமத்துவம் மற்றும் அந்தரங்கத் தன்மை என்பவற்றுக்கான உரிமைகளை மதிப்பதற்குத் தவறும் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும், மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் (LGBTI) நபர்களைத் தாக்குதல் மற்றும் துன்புறுத்துதல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் அவர்களுடன் குற்றவியல் துர்நடத்தையில், ஈடுபடும் பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கையை அல்லது சட்ட நடவடிக்கையை எடுக்கவும்.
- ஆட்களை அவர்களின் பால்நிலை வெளிப்பாடு, பால்நிலை அடையாளம், பால்நிலை ஈர்ப்பு அல்லது பாலியல் தொழில் புரியும் நிலை என்பவற்றின் அடிப்படையில் தன்னிச்சையான விதத்தில் தடுத்து வைப்பதனை நிறுத்தவும். தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 399 இன் கீழ் “ ஆள்மாறாட்டம் செய்வதன் மூலம் ஏமாற்றுதல்” குற்றம் தொடர்பாக திருனர் ஆட்களை கைது செய்வதிலிருந்து பொலீஸ் உத்தியோகத்தர்களைத் தடுப்பதனையும் இது உள்ளடக்குதல் வேண்டும்.
- எவரேனும் ஒரு நபர் தன்னை ஒரு பெண்ணாக அடையாளப்படுத்தும் நிலையில்(திருனர் பெண்கள் மற்றும் இடைப்பால்நிலைப் பெண்களையும் உள்ளடக்கிய விதத்தில்) அவர் தொடர்பான ஏதேனும் சட்டபூர்வமான ஒரு கைது மேற்கொள்ளப்படும் பொழுது, அது சாத்தியமான சந்தர்ப்பங்களில் பெண் பொலீஸ் உத்தியோகத்தர்களின் எதிரில் மேற்கொள்ளப்படுவதனையும், அவர்கள் பெண்களின் காவல் அறைகளில் அல்லது மறியற் சாலைகளில் அல்லது

அவர்களுடைய அந்தரங்கம் மற்றும் கண்ணியம் என்பவற்றுக்கு மதிப்பளிக்கும் புறம்பான காவலறைகளில் தடுத்து வைக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தவும்.

- பால்நிலை வெளிப்பாடு அல்லது பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் தனிநபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் புலன் விசாரணை செய்யவும் குற்றமிழைத்திருக்கும் பொறுப்புக் கூற வேண்டிய ஆட்கள் சட்டத்தின் முழுமையான பரப்புக்குள் நியாயமான விதத்திலும், பக்கச்சார்பற்ற விதத்திலும் புலன் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- LGBTI செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஆகிய தரப்புக்களுடன் கூட்டாக இணைந்து, அடிப்படை உரிமைகளை உள்ளடக்கும் இலங்கை அரசியலமைப்பின் அத்தியாயம் III மற்றும் LGBTI ஆட்கள் தொடர்பாக அதனைப் பிரயோகிக்கும் விதம் என்பன குறித்து பொலிஸ் கொமாண்டர்களுக்கும், பதவியணியினருக்கும் பொருத்தமான பயிற்சியை வழங்கவும்.
- LGBTI ஆட்கள் மற்றும் பாலியல தொழிலாளர்கள் போன்ற புறமொதுக்கப்பட்ட குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுக்களையும் உள்ளடக்கிய விதத்தில், சிவில் சமூகக் குழுக்களுக்கென வெளியிட நிகழ்ச்சிகளை நடத்தவும். மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்படும் ஆட்கள், தாமே முன்வந்து அத்தகைய துஷ்பிரயோகங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்களை எவ்வாறு தெரிவிக்க முடியும் என்பது குறித்து அவர்களுக்குத் தகவல்களை வழங்கவும்.
- இலங்கைக்குள் வாழ்ந்து வரும் அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்கான தமது கடப்பாட்டினை நிலைநாட்ட வேண்டும் என்ற விடயம் தொடர்பாக ஒட்டு மொத்த பொலீஸ் அணிக்கும் ஒரு செய்தியை அனுப்பி வைக்கும் பொருட்டு, LGBTI சமூகத்தைச் சேர்ந்த ஆட்களை வன்முறையிலிருந்தும், பாராபட்சத்திலிருந்தும் பாதுகாப்பதற்கென முனைப்பான விதத்தில் முயற்சிகளை மேற்கொண்டு வரும் பொலீஸ் உத்தியோகத்தர்களை பகிரங்கமாக அங்கீகரித்து, பாராட்டவும்.

## பதிவாளர் நாயகம் திணைக்களத்துக்கு

- மருத்துவ நடைமுறைகள் அல்லது பலவந்தம் என்பன இல்லாத நிலையில் சுய பிரகடண செயன்முறை ஒன்றுக் கூடாக, பிறப்புச்சாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சட்டபூர்வமான தமது பால்நிலையை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆட்களுக்கு இடமளிக்கும் பால்நிலை அங்கீகார நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்வதற்கென சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க முகவரகங்கள் என்பவற்றுடன் கூட்டாக இணைந்து செயற்படவும்.
- தமது பால்நிலை அடையாளம் தொடர்பாக தொடர்ச்சியாக தாழ்த்தப்படும் விதத்திலான நுட்பமான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதனை தவிர்த்துக் கொள்வதற்கு அவர்களை இயலச் செய்யும் பொருட்டு, தமது சட்ட ரீதியான பெயர் மற்றும்.·. அல்லது பால்நிலை அடையாளம் என்பவற்றை மாற்றித் தருமாறு வேண்டுகோள் விடுக்கும் ஆட்களுக்கு ஒரு புதிய பிறப்புச் சான்றிதழை வழங்கவும்.
- அனைத்து ஊழியர்களுக்குமான பயிற்சியின் போது – குறிப்பாக, பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கி வரும் பதவியணியினருக்கு பயிற்சியின்

போது – சட்டபூர்வமான பால்நிலை அங்கீகாரம் மற்றும் பாராபட்சம் காட்டாதிருத்தல் என்பன தொடர்பான ஒரு கூறு உள்ளடக்கிக் கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

## ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் என்பவற்றுக்கு

- ஆட்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு என்பவற்றில் மருத்துவ நடைமுறைகள் அல்லது பலவந்தம் இல்லாத விதத்தில் சுய பிரகடன செயன்முறை ஒன்றுக் கூடாக தமது சட்டபூர்வமான பால்நிலையை மாற்றிக் கொள்வதற்கு இடமளிக்கும் பால்நிலை அங்கீகார நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்து வைத்து, அமுல்படுத்துவதற்கென சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க முகவரகங்கள் என்பவற்றுடன் கூட்டாக இணைந்து செயற்படவும்.
- அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் பயிற்சியில் - குறிப்பாக பொது மக்களுக்கு சேவைகளை வழங்கி வரும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில் - சட்டபூர்வமான பால்நிலை அங்கீகாரம் மற்றும் பாரபட்சம் காட்டாதிருத்தல் என்பவற்றைக் கொண்ட ஒரு கூறு உள்ளடக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

## பாலியல் ரீதியாகப் பரவும் நோய்கள்/எயிட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டத்துக்கு

- எச்ஐவி கல்வியூட்டல், தடுப்பு, உளவளத் துணை, பரிசோதனை மற்றும் சிகிச்சைச் செயற்பாடுகள் என்பவற்றில் திருனர் பிரிவு ஆட்களையும், ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆட்களையும் வினைத்திறன் மிக்க விதத்தில் பங்கேற்கச் செய்யவும்.
- பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படும் நிலை, எச்ஐவி தடுப்பு மற்றும் சிகிச்சை என்பவற்றை அணுகுவதற்கான ஒரு தடையாக இருந்து வருகின்றது எனக் குறிப்பிட்டு, அவ்விதமான பாரபட்சத்தை பகிரங்கமாகக் கண்டனம் செய்யவும்.

## தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு

- மருத்துவ நடைமுறைகள் அல்லது பலவந்தம் என்பன இல்லாத விதத்தில், ஒரு சுய பிரகடன செயன்முறைக்கு ஊடாக உத்தியோகபூர்வ ஆவணங்களில் ஆட்கள் தமது சட்டபூர்வமான பால்நிலைத்தை மாற்றிக் கொள்வதற்கு இடமளிக்கும் பால்நிலை அங்கீகார நடைமுறை ஒன்றை தொடர்ந்து முன்னெடுத்து, கண்காணித்து வரவும்.
- சட்டத்தை அமுலாக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவத் துறையில் தொழில் புரிபவர்கள் ஆகியோரின் செயல்களையும் உள்ளடக்கிய விதத்தில், மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்ட (LGBTI) நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறை மற்றும் பாராபட்சம் என்பவற்றை நெருக்கமான விதத்தில் கண்காணிக்கவும்.

- மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றை கொண்டிருப்பவர்களின் உரிமைகள் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு இணங்கி ஒழுகும் நிலையை விருத்தி செய்து கொள்வதற்கெனவும், அச்சட்டங்களுக்கு பொலீஸ் உத்தியோகத்தர்கள் இணங்கி ஒழுகுவதனை கண்காணிப்பதற்கெனவும் இலங்கைப் பொலீஸ் சேவைக்கு பரிந்துரைகளை வழங்கவும்.
- சட்டத்தை அமுலாக்கும் உத்தியோகத்தர்கள், மருத்துவத் துறையில் தொழில் புரிபவர்கள் ஆகியோரையும் உள்ளடக்கிய விதத்தில் பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வைத் தூண்டும் பிரச்சாரங்களை நடத்தவும். பால்நிலை வெளிப்பாடு, பால்நிலை அடையாளம் மற்றும் பால்நிலை ஈர்ப்பு என்பவற்றின் பன்முகத் தன்மையை சகித்துக் கொள்ளல் மற்றும் மதித்தல் என்பவற்றையும் அப்பிரச்சார இயக்கங்கள் உள்ளடக்குதல் வேண்டும். மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் (LGBTI) ஆட்கள் போன்ற புறமொதுக்கப்பட்ட குழுக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரிவினரையும் உள்ளடக்கிய விதத்தில் பொதுமக்களுக்கும், சிவில் சமூகக் குழுக்களுக்கும் வெளியகச் செயற்பாடுகளை நடத்தவும். உரிமைகள் மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எவ்வாறு முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பான தகவல்களை அவர்களுக்கு வழங்கவும்.

## இலங்கை மருத்துவப் பேரவை, மருத்துவக் கழகம் மற்றும் மனநல மருத்துவர் கல்லூரி என்பவற்றுக்கு

- சர்வதேச மருத்துவ கருத்தொற்றுமையின் பிரகாரம், ஒரே பால்நிலை தொடர்பான பால்நிலை ஈர்ப்பு, கவர்ச்சி, நடத்தை மற்றும் திருனர் அடையாளம் என்பன மருத்துவ சம்பந்தப்பட்ட நோய்க் கூறுகளாக இருந்து வரவில்லை என்பது தொடர்பாக தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கவும்.
- புறமொதுக்கப்படும் நிலை மற்றும் பாரபட்சம் என்பன மாறுபட்ட பால்நிலை ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றைக் கொண்டிருக்கும் (டுபுடீவுஐ) ஆட்களின் சுகாதார நிலைமைகள் மீது எடுத்து வரக் கூடிய தாக்கங்கள் தொடர்பாகி மருத்துவத் தொழிற் துறையினருக்கு சுற்றறிக்கைகளை வெளியிடவும்.